தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

M.C.O.P. No. 782/2024

29.10.2025

ம.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

விபத்து மாட்டுப்பொங்கல் அன்று மாலை என் வீட்டு வாசலில் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும்போது நானும் என் மனைவியும் வீட்டுக்குள் இருந்தோம் என்றால் சரிதான். என் மகன் தற்போது U.K.G படிக்கிறார். நான் என் புகாரில் என் மகன் விளையாடிக்கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என் மகன் ஓரமாக மண்தரையில் தான் நின்றுகொண்டிருந்தான். விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர் மதுரைவீரன் எங்கள் தெருவைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் மகனை நாங்கள் சரியாக கவனிக்காமல் சாலையில் விளையாடவிட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அது சம்மந்தமான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது மேலும், அதற்கான குறிப்பாணை வழங்கப்பட்டு, வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மோட்டார் வாகனத் திருத்தச் சட்டம், மற்றும் காப்பீட்டு விதிகளின் படி 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. தற்போது என் மகன் UKG படித்து வருவதால் விபத்தினால் ஏற்பட்ட காயங்களால் அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.